சேகரித்தல், வளாகத்தில் விழும் மழைநீரை சேகரித்தல், மழைநீர் வடிகாலில் வரும் நீரை சேகரித்தல், நீர்நிலைகளைப் புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல், சமையல் அறை மற்றும் குளியல் அறைகளில் உபயோகிக்கப்படும் நீரின் அளவைக் குறைத்தல், சமுதாய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டம் 20 கோடி ரூபாய் செலவில் மாநிலத்தின் அனைத்து நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11. பேரூராட்சிகளில் திறந்தவெளியில் மலம் கழித்தலை அறவே நீக்கம் செய்திடும் பொருட்டு, இந்த ஆண்டு 90,150 எண்ணிக்கையிலான தனிநபர் கழிப்பிடங்கள் 108 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 2,620 இருக்கைகள் உள்ளடக்கிய சமுதாயக் கழிப்பிடங்கள் 17 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். தற்போது நான் அறிவித்த திட்டங்களின் பயனாக நகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுவதுடன், நகர்ப்புறங்கள் தூய்மையாக விளங்கவும் வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

(ஆ) தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகள், புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், தனிநபர் மற்றும் குழு கிணறுகள் அமைத்தல், புதிய அங்கன்வாடி மையங்கள், கிராம ஊராட்சி செயலர்களுக்கு சிறப்பு மாத ஓய்வூதியம் உயர்த்துதல், தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல், சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்தல், அம்மா பூங்காக்கள் அமைத்தல், அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள், சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற வேண்டும் என்ற அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

2016 ஆகஸ்ட் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கீழ்க்கண்ட அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1. 2015-2016 ஆம் ஆண்டில் முதன்முறையாக, "தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டம், 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கிராம ஊராட்சிகளில் மண் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மேம்படுத்தவும், சேதமடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும் மற்றும் சிறு பழுதடைந்த தார்ச் சாலைகளைப் புதுப்பித்துப் பராமரிக்கவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த ஆண்டில், 900 கிலோ மீட்டர் நீளமுள்ள மண் சாலைகள் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதிக அளவில் சேதமடைந்த 1,400 கிலோ மீட்டர் நீளமுள்ள தார்ச் சாலைகள் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) 1,200 கிலோ மீட்டர் நீளமுள்ள சிறு பழுதடைந்த தார்ச் சாலைகள் புதுப்பிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இவை அனைத்தும் 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களது விளைபொருட்களை எளிதில் சந்தைப்படுத்தவும், கிராமப்புற பொருளாதாரம் மேம்பாடு அடையவும் வழிவகுக்கும்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் ஒவ்வோராண்டும் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் 78 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 148 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு, 10 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக உள்ள இடங்களில், தனிநபர் விவசாய நிலங்களில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, விவசாய விளைநிலங்களின் பரப்பினை அதிகரிக்க, தனிநபர் கிணறுகள் மற்றும் குழு கிணறுகள் அமைக்கப்படும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 ஆகஸ்ட் 29

இந்த ஆண்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில், ஒரு கிணறு 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 250 தனிநபர் கிணறுகள் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், போதிய இடம் இல்லாத நிலையில், குறைந்தபட்சம் 3 விவசாயிகளைக் கொண்ட குழுக்களுக்கு, அரசு இடங்களில், ஒரு குழு கிணறு தலா 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 250 குழு கிணறுகள் 30 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தத்தில் 500 கிணறுகள் 50 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம், ஊரகப் பகுதிகளில் நீர்ப்பாசன வசதியற்ற விளைநிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், பயிரிடப்படும் நிலப்பரப்பு அதிகரித்து, ஊரக விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

முற்பகல் 11-45

4. ஊரகப் பகுதிகளில் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் அறிவுசார் வளர்ச்சியைப் பெற்று வளர்வதற்கான உகந்த சுற்றுச்சூழலை உருவாக்கிட அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு உடல்நலப் பரிசோதனை செய்வதுடன், நோய் எதிர்ப்பு மற்றும் சுகாதாரக் கல்வி குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றன. இந்த ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆயிரம் அங்கன்வாடி மையங்கள் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இம்மையங்களில் பயிலும் குழந்தைகள் காற்றோட்டமான, அதிக வசதிகளுடன்கூடிய பாதுகாப்பான இடங்களில் பயின்றிட வழிவகை ஏற்படும்.

5. ஊரகப் பகுதிகளை பசுமைமயமாக்க, ஊரகச் சாலைகளின் இரு மருங்கிலும் பழ மரங்கள், கால்நடைத் தீவன மரங்கள் மற்றும் வருவாய் அளிக்கும் மரங்கள் நடப்படும். இம்மரங்கள் சாலைகளில் மண் அரிப்பைத் தடுப்பதுடன், ஊராட்சிகளுக்குக் கூடுதலாக தொடர் வருவாய் கிடைக்கச் செய்திடும். இந்த ஆண்டில் கிராம ஊராட்சிச் சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் பிரதம மந்திரி கிராம திட்டச் சாலைகளின் இரு மருங்கிலும் பத்தாயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு 195

2016 ஆகஸ்ட் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 இலட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாத்திடவும், ஊரகப் பகுதிகளைப் பசுமைமயமாக்கவும் வனத் துறையினருடன் ஒருங்கிணைந்து 68 இலட்சம் பழ மரக் கன்றுகள் மற்றும் கட்டடப் பணிகளுக்குப் பயன்படும் மரக் கன்றுகள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் ஊராட்சி நிலங்கள், அரசு நிலங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற பொருத்தமான இடங்களில் 555 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு நடப்பட்டு பராமரிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த பல்வேறு சங்கங்கள் கிராம ஊராட்சி செயலர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது வழங்கப்படும் சிறப்பு மாத ஓய்வூதியம் மற்றும் ஒட்டுமொத்தத் தொகையை உயர்த்தி வழங்கும்படி கோரிக்கை வைத்துள்ளன. அவர்களின் கோரிக்கையை ஏற்று, கிராம ஊராட்சி செயலர்கள் ஓய்வு பெறும்போது வழங்கப்படும் ஒட்டுமொத்தத் தொகையை 50,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பு மாத ஓய்வூதியம் 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. கிராம ஊராட்சிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பதற்கு எனது தலைமையிலான அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து வருகிறது. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகளைப் பிரித்தெடுத்து பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள 2015 ஆம் ஆண்டு முதல் 'தூய்மைக் காவலர்கள்' ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். 9,000 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடக் கழிவுகளை சேகரித்தல், பிரித்தல், அவற்றைப் பாதுகாப்பாக அகற்றுதல், மறு சுழற்சி செய்தல் ஆகியவற்றிற்கு மூன்று சக்கர மிதிவண்டிகள்/தள்ளுவண்டிகள், குப்பைத் தொட்டிகள், குப்பைகள் பிரித்தெடுக்கும் கொட்டகைகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேற்கண்ட ஊராட்சிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு செயல்படுத்த, பிற மாநில அரசுகளும் நடவடிக்கை மேற்கொண்டு

வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டில் மீதமுள்ள 3,524 கிராம ஊராட்சிகளிலும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஏற்கெனவே இத்திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். இவற்றிற்கு 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இந்தியாவிலேயே அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் முதல் மாநிலம் என்ற பெருமை தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

9. முழு சுகாதார தமிழகம் என்ற இலக்கினை அடைய எனது தலைமையிலான அரசு பல்வேறு முன்முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பு மக்களையும் ஒருங்கிணைத்து தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் திட்டங்களின்கீழ் இந்த ஆண்டு 15 இலட்சத்து 17 ஆயிரம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படும். இதனால் மேலும் 4,175 கிராம ஊராட்சிகள் சுகாதாரத்தில் தன்னிறைவு பெற்று, அதன்மூலம் அவை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக உருவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. குக்கிராமங்களை அடிப்படை அலகாகக் கொண்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளும் 'தாய்' திட்டம் கடந்த 5 ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

'தாய்' திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள சிறுபாசன ஏரிகள் விரிவான முறையில் புனரமைப்பு செய்யப்படும். இந்த ஏரிகளில் உள்ள முட்புதர்களை அகற்றி இயந்திரங்களின்மூலம் ஏரிகள் தூர்வாரப்பட்டு, மதகு மற்றும் கலங்கல்கள் புதிதாகக் கட்டப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்படும். இதன்மூலம் குக்கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழு கொள்ளளவினை மீட்கவும், குடிநீர் மற்றும்

விவசாயத் தேவைகளுக்கான நீரினை சேமித்து முறைப்படுத்தவும் வழிவகை ஏற்படும்.

இந்த ஆண்டில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,200 சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்து மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், ஏரிகளில் சேமிக்கப்படும் நீரின் அளவு அதிகரிப்பதுடன் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ஊரகப் பகுதிகளில் விவசாயப் பரப்பளவு அதிகரிப்பதுடன், ஊரகப் பொருளாதாரம் உயரவும் வழிவகுக்கும்.

11. கிராம ஊராட்சிகளில் குழந்தைகள், பெண்கள் மற்றும் பெரியோர்களுக்கு பொழுதுபோக்கு, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி சாதனங்கள், நடைபாதைகள், சிமென்ட் பெஞ்சுகள், குடிநீர் வசதிகள், புல்தரை, பசுமைத் தோட்டம் மற்றும் கழிப்பறை ஆகிய அம்சங்களுடன்கூடிய 500 'அம்மா பூங்காக்கள்' 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

12. தமிழ்நாட்டில், ஊரகப் பகுதிகளின் தெருக்களில் சுமார் 16 இலட்சத்து 46 ஆயிரம் குழல் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. தெரு விளக்குகளை முறையாகப் பராமரித்தல், மின்சார செலவினைக் குறைத்தல் மற்றும் ஒளி விளக்குகளின் நீடித்த செயல்திறன் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு ஊரகப் பகுதிகளில் உள்ள குழல் விளக்குகள் அனைத்தும் LED விளக்குகளாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரகப் பகுதிகளில் 8 இலட்சத்து 24 ஆயிரம் குழல் விளக்குகள் LED தெரு விளக்குகளாக 300 கோடி ரூபாய் செலவில் மாற்றிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மீதமுள்ள 8 இலட்சத்து 22 ஆயிரம் குழல் விளக்குகளும் 300 கோடி ரூபாய் செலவில் LED தெரு விளக்குகளாக மாற்றியமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

13. ஊரகப் பகுதி இளைஞர்களுக்கு உடல் திறன் மற்றும் மன வளத்தினை மேம்படுத்த ஊரகப் பகுதிகளில் 'அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள்' அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒவ்வொன்றும் 10 இலட்சம் ரூபாய் செலவில் 500 'அம்மா உடற்பயிற்சிக் கூடங்கள்' 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

14. சுய உதவிக் குழுக்களுக்குப் போதுமான கடன் உதவியை, உரிய நேரத்தில், குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிகள் வழங்குவதன்வாயிலாக பெண்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய இயலும். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக கடந்த 5 ஆண்டுகளில் 26,460 கோடி ரூபாய் கடனாக வங்கிகள்மூலம் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு சுய உதவிக் குழுக்களுக்கு 6,000 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் வெளியிட்ட இந்த அறிவிப்புகள்மூலம் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கப்பெறுவதுடன், அவர்களின் பொருளாதார நிலை உயரவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) பால் உறைகளுக்கான பாலித்தீன் பிலிம் தொழிற்சாலை நிறுவுதல், நவீன பாலகங்கள், டெட்ரா பேக் பால் பாக்கெட்டுகள் தயாரிப்பு இயந்திரங்கள் நிறுவுதல், கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், வெண்ணெய் சிப்பம் கட்டும் இயந்திரம் நிறுவுதல், மாதவரம் பால் பண்ணை குடியிருப்பைப் புனரமைத்தல், புதிய ஓய்வூதியத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில் நாளொன்றுக்கு 8.35 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறன் உயர்த்தப்பட்டுள்ளது. பால் குளிர்விக்கும் அறைகளின் திறன் நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவை தவிர, நாளொன்றுக்கு 7.30 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் குளிர்விக்கும் அறைகள் பல்வேறு பால்